THIRU K. T. K. TANGAMANI : Sir, on a point of order, I want to make a submission. Last week, you were pleased to tell us that your ruling on the point of order would be given to us. We were waiting for it, but on Saturday, you were not here. We would like to know if you would be giving your ruling today.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் நாளைக்குச் சொல்கிறேன்.

(2) அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் ஆறுவது, ஏழாவது அறிக்கைகள்.

THIRU N. GANAPATHY : Mr. Speaker, Sir, I rise to present the Sixth and Seventh Reports (Fifth Assembly) of the Committee on Delegated Legislation.

(3) நடைமுறைக் கேள்விகள்.

(அ) டில்லியில் நடந்த மாநில முதலமைச்சர்கள், உணவு அமைச்சர்கள் மாநாடு குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர். சென்ற இரண்டு தினங்களாக டில்லியிலே மாநில முதலமைச்சர் களின் மாநில உணவு அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற உணவுப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்கெனவே நமது டில்லி சர்க்காரிடத்திலே கூடுதல் உணவு கேட்டுக் கொண்டிருக் கிறோம். நமது மாநிலத்தின் முதலமைச்சரவர்களோ உணவு அமைச்சரோ போய் நமது கோரிக்கையை வலியுறுத்தாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. முக்கியமான விஷயமாக இருந்தால் உங்கள் தலைவர் பேசுவார். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற தலைப்பை வைத்துக் கொண்டு உறுப்பினர் கள் எந்த நேரத்திலும் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று இதைப் பயன்படுத்தினால் அது நல்ல முறையல்ல. இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

(ஆ) அரிசன நல அமைச்சர் சபைக்குத் தவறான தகவல் அளித்ததாகக் கூறி எழுப்பப்பட்ட பிரச்சினை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது 10 ஆண்டுகளில் அரிஜனங்கள் வீட்டு மனைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் எந்தத் தொகையும் திரும்ப அரசுக்கு வரவில்லை என்றார். நான் அரிசன நலக் குழுவில் இருந்தபோது இப்பேர்ப்பட்ட புகார்கள் வந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது. பிரிவிலெஜ்ஜாகக் கொண்டு வாருங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சபைக்கு நிறைய தவருன தகவல்கள் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவருன தகவல்கள் என்ருல் நீங்கள் சொல்வது எனக்குத் திருப்தி படவேண்டும்.

திரு. பெ சௌந்தரபாண்டியன் : நான் ரிகார்டுகளைப் பார்த்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரிடம் அதைக் கொடுங்கள். நான் பார்க்க வேண்டும். நீங்கள் எழுதிக் கொடுங்கள். நாளைக்கு எழுதிக் கொடுங்கள். அப்படி தவருன தகவல் இருக்கிற தென்ருல் பிரிவிலெஜ் கிளப்புங்கள்.

புலவர் பழனிச்சாமி அவர்கள் தொடர்ந்து பேசுவார். 5 நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

(4) 1975–76-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

புலவர் சி. பழனிச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, லெவி கொள் முதல் செய்வதில் பெரிய நில முதலாளிகளுக்கு சலுகை வழங்கப்படுவ தாக எனது பகுதியில் இருக்கிற விவசாயிகள் புகார் சொல்லியிருக்கிருர் கள். அம்மாதிரியான........

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரிப்போர்ட்டை சப்மிட் பண்ணியாச்சு. நீங்கள் திரு. பொம்மனேடு பேசிக் கொண்டிருந்தீர்கள், கவனிக்கவில்லை.

புலவர் சி. பழனிச்சாமி : அப்படிக் கொள்முதல் செய்வதில் பெரிய முதலாளிகளுக்கு சலுகைகள் செய்வதாக, அதற்கு ஆங்காங்கு இருக்கிற கணக்குப் பிள்ளைகள்தான் காரணம் என்று சொல்கிருர்கள். லெவி கொள்முதல் செய்வதிலே இந்தக் கணக்குப்பிள்ளைகள் ஈடுபடாமல் இருப்பது நல்லது என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அது மட்டு மல்லாமல் யார் யாருக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கிறதோ அந்த நிலங்களிலிருந்து யார் யாரிடமிருந்து எவ்வளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்ற விவரத்தை ஒரு அறிக்கையாக வெளியிட்டு ஆங் காங்குள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலேயும், தாலுகா அலுவலகங் களிலேயும் பொது மக்கள் பார்வைக்கு வைக்கவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.